## இலகு புகையிரத போக்குவரத்து செயற்திட்டம் - 2019

-----------------------------------------------------------------------------------------------------------

இலகு புகையிரத போக்குவரத்து செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஜப்பான் சர்வதேச கூட்டுரவு முகவரகம் ஆகியவற்றுக்கு இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 மார்ச் 11 ஆந் திகதிய செயற்திட்ட பிரேரணையின் IIஆம் பின்னிணைப்பின் 18ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு, நிறைவேற்றல் முகவராகக் காணப்படுகின்றது. செயற்திறனான போக்குவரத்து முறைமையின் இயலளவினை மேம்படுத்தல் மற்றும் கொழும்பு பெருநகர் பகுதியில் இலகு புகையிரத போக்குவரத்தினை அறிமுகப்படுத்துவதன் (எல்.ஆர்.ரீ) மூலம் பொதுப் போக்குவரத்து சேவையை மேம்படுத்தல் மற்றும் வாகன நெரிசலின் அதிகரிப்பிற்கு தீர்வினை வழங்குதல் ஆகியன மூலம் நகர்ப்புற சூழலை மேம்படுத்தல் இந்த செயற்திட்டத்தின் நோக்கங்கள் ஆகும்.

செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ஜப்பான் யென் 246,641 மில்லியனாக காணப்பட்டதுடன், அதில் ரூபா 286,839 மில்லியனுக்குச் சமமான ஜப்பான் யென் 200,215 மில்லியன் ஜேஜசீஏ (JICA) இனால் 2019 – 2024 காலப்பகுதியினுள் 06 பகுதிகளின் கீழ் வழங்க இணங்கியுள்ளது. எஸ்எல் - பீ119 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பகுதி 01 இன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 59,100 மில்லியனுக்கு சமனான ஜப்பான் யென் 41,252 மில்லியன் ஆகும். அதில் ரூபா 43,037 மில்லியனுக்கு சமனான ஜப்பானிய யென் 30,040 ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பிற்கான முகவரகத்தினால் நிதியளிக்கப்பட இணங்கப்பட்டது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2019 மார்ச் 25 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2024 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

அட்டவணை 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள தாக்கங்களை தவிர்த்து, 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் நிதி நிலைமையினை மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய

பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

செயற்திட்டத்தின் வருடாந்த மற்றும் கால அடிப்படையிலான நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு ஏற்ற வகையில், செயற்திட்டத்தினால் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவுகளை பேணுமாறு கோரப்படுகின்றது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு செயற்திட்டத்தின் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டு குறைபாடு | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| மீளாய்வாண்டின் ஒக்தோபர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்கு உரியதாக செலுத்தப்பட வேண்டிய ரூபா 603,134,847 மதியுரைக் கட்டணங்கள் நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த நடைமுறைப் பொறுப்புகள் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன. | செலுத்த வேண்டியவைகள் நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டின் இறுதியில் உள்ளபடியான செலுத்த வேண்டியவைகளின் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்டப் பணிகளின் பொதீக செயன்முன்னேற்றம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கூறு | புணி | கணக்காய்வு பிரச்சினை | தாக்கம் | தாமதத்திற்கான காரணம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|---|---|
| | ------- | --------- | -------------- | ------------ | ---------------- | ------------------ | ----------------- |
| (அ) | காணி சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்ற கண்காணிப்பு | காணி சுவீகரிப்பு | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக தேவையான காணிகளை இனங்காண தவறுதல் மற்றும் காணி சுவீகரிப்பு செயற்முறையின் கண்காணிப்பு நலிவடைந்த காரணத்தால் காணி சுவீகரிப்பிலான செயன்முன்னேற்றம் 10 சதவீதமாக காணப்பட்டது. இதன் விளைவான செயற்திட்டப் பணிகள் தாமதமடையக்கூடும். | ஒட்டுமொத்த செயற்திட்டத்தினதும் திட்டமிடப்பட்ட நோக்கங்களை பாதிக்கும். | நட்டஈடு வழங்குவதற்கான அமைச்சரவை தீர்மானத்தினை பெற்றுக்கொள்வதிலான சிக்கல்கள். | தேவையான காணிகளை திட்டவட்டமாக இனங்காணல் மற்றும் காணிகளின் எல்லைகளை துல்லியமாக இனங்காணல் ஆகியன செயற்திட்டத்தின் விரிவான வடிவமைப்பினை நிர்ணயிப்பதல் அதிகளவில் தங்கியுள்ளது. | செயற்திட்டத்தின் பணிகளை திட்டமிட்ட காலப்பகுதியில் நிறைவுசெய்து, செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்ள சிறந்த செயற்திறனான செயற்திட்ட முகாமைத்துவ முறைமையொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (ஆ) | உப செயற்திட்டம் | தொகுதி – 1 - இருப்பு சுழற்சி<br>தொகுதி – 2 – பணிகளை ஆரம்பித்தல்<br>தொகுதி – 3 – டிபொட் பணிகள்<br>தொகுதி – 4 – வியடக்ட் நிலையங்கள் (கிழக்கு)<br>தொகுதி – 5 – வியடக்ட் நிலையங்கள் (மத்திய) | செயற்திட்ட அமுலாக்கல் திட்டத்தின் பிரகாரம், உரிய காலப்பகுதியில் பெறுகை நடவடிக்கைகள் நிறைவு செய்யப்படாமையால், 2020 யூன் மாதத்தின் இறுதியில் கையளிக்கப்பட வேண்டிய ஜப்பானிய யென் 149,184 பெறுமதியான ஆறு உப செயற்திட்டங்கள் 2020 செப்தம்பர் வரையிலும் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டக் காலம் மற்றும் கால அட்டவணை விஞ்சக்கூடும். | திட்டத்தின் பிரகாரம் மதியுரைக் குழுவின் ஆயத்தமற்ற தன்மை. | வடிவமைப்பு மற்றும் கண்காணிப்பு மதியுரையாளர் 2019 ஏப்ரல் 1ஆந் திகதி ஆயத்தமாகி பணிகளை திட்டமிட்டவாறு ஆரம்பித்திருந்தார். எவ்வாறான போதிலும், 2019 ஏப்ரல் மாதத்தில் எதிர்பாராத சம்பவமொன்று இடம்பெற்றது (2019 ஏப்ரல் 21ஆந் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல்). | செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்ள சிறந்த செயற்திறனான செயற்திட்ட முகாமைத்துவ முறைமையொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| | **கணக்காய்வு விடயம்** | **தாக்கம்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **கணக்காய்வாளரிக் பரிந்துரைகள்** |
|---|---|---|---|---|
| | ------------------------ | ------------- | ---------------------- | ---------------------------------- |
| (அ) | செயற்திட்டத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம்,இலகு புகையிரத போக்குவரத்து அதிகாரச்சட்டம் மீளாய்வாண்டினுள் அங்கீகரிக்கப்பட வேண்டும். எவ்வாறான போதிலும், குறித்த | செயற்திட்டத்தின் காலம் நீடிக்கக்கூடும் என்பதுடன், செயற்திட்ட அமுலாக்கல் தடைகள் உருவாகலாம். | 2019 நவம்பர் மாதம் முதல் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளரால் இலகு புகையிரத போக்குவரத்து செயற்திட்டம் தொடர்ச்சியாக | தற்போதைய நிலைமை குறித்து மதிப்பீடு செய்த பின்னர் புதிய மாற்றுவழிகள் தொடர்பில் ஆராய்ந்து திருத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | அதிகாரச்சட்டம் 2020செப்தம்பர் மாதம் வரையிலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | | மேற்கொள்ளப்படாது என குறிப்பிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக, செயற்திட்ட முகாமைத்துவ பிரிவிற்கு மீளக் கிடைத்த இலகு புகையிரத போக்குவரத்து அதிகாரச்சட்டத்தினை நாம் முன்னெடுத்திருக்கவில்லை. | |
| (ஆ) | மீள தயாரிக்கப்பட்ட போக்குவரத்து வீதி உப செயற்திட்டக் கால அட்டவணையின் பிரகாரம், கோவை வடிவமைப்பு மற்றும் அடித்தள வடிவமைப்பு ஆகியன மீளாய்வாண்டின் இறுதியில் உள்படியாக முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளன. எவ்வாறான போதிலும், குறித்த பணிகள் 2020 செப்தம்பர் மாதம் வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக செயற்திட்டத்தின் ஆரம்ப பணிகளில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன. | செயற்திட்டத்தின் காலப்பகுதி நீடிப்பு செய்யப்பட வேண்டும். | மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மதிப்பீடுகள் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளன. | புதிய பிரேரணையை அடிப்படையாக கொண்டு எஞ்சிய பணிகளை துரிதமாக நிறைவுசெய்ய திருத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். |

**3.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைப்பயன்பாடுடைய வளங்கள்**

| கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரிக் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| --------------------- | --------------- | --------------------- | ---------------------------------- |
| செயற்திட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 8 மாதங்கள் கடந்த நிலையிலும், 2019 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக | செயற்திட்டத்தின் திட்டமிடப்பட்ட காலப்பகுதியினுள் செயற்திட்டப் பணிகளை நிறைவு செய்ய முடியாதிருந்தது. | வடிவமைப்பு ஆலோசகரினால் நிதியாண்டிற்குரிய பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையற்ற செலவினங்களை தவிர்ப்பதற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் புதிய திட்டங்களை |

| | | | |
|---|---|---|---|
| கடன் முகவரகத்தினால் வழங்கப்பட்ட ரூபா 43,037 மில்லியனுக்கு சமனான ஜ.யென் 30.040 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டின் 4 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 2,019.47 மில்லியனுக்கு சமனான ஜ.யென் 1,250.45 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டினூடாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 4,375 மில்லியன் நிதியேற்பாட்டின் 57 சதவீதத்திற்கு சமனான ரூபா 2,476 மில்லியன் கூட்டுத்தொகை மாத்திரம் மீளாய்வாண்டினுள் பயன்படுத்தப்பட்டிருந்தன. | | | கண்காணிப்பதற்கு உரிய பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். |

**3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான விடயங்கள்**

| | கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரிக் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | மதியுரையாளர்களை ஆட்சேர்ப்பதற்கான குறிப்பு விதிமுறையின் 05ஆம் பிரிவின் பிரகாரம், முக்கிய நிபுணர்களின் தகைமைகள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். எவ்வாறான போதிலும், அவ்வாறான மதிப்பீடுகளை மேற்கொள்ளாது மீளாய்வாண்டினுள் முக்கிய நிபுணர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். | முக்கிய நிபுணர்களின் குறைவான தொழிற்துறை சார் அறிவு காரணமாக, செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்த்த பெறுபேற்றினை பெற்றுக்கொள்ள முடியாது. | மதியுரை நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்ட தொழில்நுட்ப முன்மொழிவுகளின் மதிப்பீடு, திறைசேரியினால் நியமிக்கப்பட்ட அமைச்சரவை அங்கீகாரம் பெற்ற மதியுரை பெறுகைகள் குழுவினால் பூரணப்படுத்தப்பட்டது. | முக்கிய நிபுணர்கள் ஆட்சேர்ப்பதற்கு முன்னர் குறிப்பு விதிமுறைகளுக்கமைய மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | செயற்திட்டத்தின் நோக்கங்கள் குறித்து கவனத்திற்கொள்ளாது வரிசை அமைச்சினால் பொது மக்களின் விழிப்புணர்விற்காக, ரூபா 2,267,377 கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்தது. | இந்த நிலமையானது அரசின் விதிகளை மீறுவதாக காணப்படுவதுடன், இவ்வாறன நடவடிக்கைகள் அரச நிதியின் முறையற்ற பாவனை மற்றும் மோசடிக்கு வழிவகுக்கும். | மாநகர் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால், அதன் அபிவிருத்தி பணிகள் தொடர்பில் மக்களுக்கு அறிவூட்டுவதற்காக மேற்கொள்ளப்பட்டது. | செயற்திட்டத்தின் நிதிகள் செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைவதற்காக பயன்படுத்தப்படுவதனை செயற்திறனான முறையில் பயன்படுத்தப்படுகின்றன என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

**3.5 செயற்திட்டப் பணிகளை முடிவுறுத்தல்**

| கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரிக் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| செயற்திட்டத்தினை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதில் போக்குவரத்து அமைச்சரினால் செலுத்த நேர்கின்ற அதிக நடைமுறைச் செலவினம், மாற்றுத் தொடர்பாடல் வழிமுறைகள் மீதான ஈர்ப்பு குறைவாக காணப்படல், அதிக நட்டஈட்டு கொடுப்பனவுகள், உயர்வான செயற்திட்ட கிரயம் போன்ற குறைபாடுகளை கருத்திற்கொண்டு அமைச்சரவையால் 2020 ஒக்தோபர் 06ஆந் திகதி செயற்திட்ட அலுவலகத்தை மூடி, அதன் அனைத்து பொறுப்புகளையும் தீர்வையாக்கி செயற்திட்டத்தை முடிவுறுத்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. எவ்வாறான போதிலும், குறித்த செயற்திட்டமானது 2021 சனவரி மாதம் வரையிலும் முன்னெடுக்கப்பட்டவாறு காணப்பட்டது. | ஜேஐசீஏ (JICA) உடனான கடன் ஒப்பந்தம் இரத்துச்செய்யப்பட்ட காரணத்தால் இலங்கை அரசிற்கு ரூபா 5 பில்லியன நட்டஈட்டினை செலவிட நேர்ந்தது. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | அவ்வாறான தீர்மானமொன்றினை எடுப்பதற்கு முன்னர், நிதியியல் மற்றும் பொருளியல் காரணிகளை கருத்திற்கொண்டு விரிவானதொரு மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். |